இனிமையான குழந்தைகளே! எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் சிவபாபாவின் ஸ்ரீமத் பெற்றுக் கொள்ள வேண்டும். தன்னைப் பற்றிய அனைத்து விஷயங்களையும் பிரம்மா மூலம் சிவபாபாவிடம் கொடுத்துவிட வேண்டும்.

கேள்வி: ஒரே தந்தையின் குழந்தைகளாக இருந்தபோதும் சிலர் அன்பான புத்தி உள்ளவர் களாகவும், சிலர் விபரீத புத்தி உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள், ஏன்?

பதில்: எந்தக் குழந்தைகள் தங்களின் முழுத் தொடர்பையும் பாப்தாதாவுடன் வைத்திருக் கிறார்களோ, எந்த ஒரு விஷயத்திலும் சந்தேக புத்தியுள்ளவராக ஆவதில்லையோ, தங்களது உண்மையிலும் உண்மையான கணக்கு வழக்கினை பிரம்மாவின் மூலம் சிவபாபாவுக்குச் சொல்கிறார்களோ, அவர்கள் அன்பான புத்தியுள்ள குழந்தைகள். ஏதேனும் ஒரு காரணத்தால் பிரம்மா அல்லது பிராமணியிடம் (பொறுப்பு சகோதரியிடம்) கோபித்துக் கொண்டு, பாபாவுக்குக் கடிதம் தருவதில்லை, மேலும் நமக்கு பிரம்மாவுடன் எந்தத் தொடர்பும் இல்லை, சிவபாபாவைத் தான் நினைவு செய்ய வேண்டும் என்று நினைக்கின்றனர். அப்போது அவர்களுடைய புத்தியை மாயா பற்றிக் கொள்கின்றது. அவர்கள் விபரீத புத்தியுள்ளவர்கள்.

பாடல்: எனக்கு ஆதரவளிப்பவர்.......

ஓம் சாந்தி! தந்தையும் குழந்தைகளுக்கு நன்றி சொல்கின்றார். யார் உதவி செய்யும் குழந்தைகளாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு பாபாவும் நன்றி சொல்கின்றார், அந்தக் குழந்தைகளுக்கு மகிமையும் செய்கின்றார். இப்போதோ குழந்தைகள் தெரிந்து கொண்டு விட்டார்கள், அதாவது எல்லையற்ற தந்தை வந்துள்ளார். பழைய உலகத்தில் தான் தந்தை வருகின்றார். பாடவும் செய்கிறார்கள்: ஹே, பதீத பாவனா வா! ஆகவே பதீதபாவனர் வருவார், நிச்சயமாக பாவன உலகத்தை ஸ்தாபனை செய்வார். அதில் மனிதர்கள் கொஞ்சம் பேர் இருப்பார்கள். பாவன உலகத்தின் மகிமை பாடப்படுகின்றது. பாவன உலகில் பகவானை அழைப்பவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். பதீத உலகத்தில் தான் அழைக்கின்றனர். பக்தர்கள் தாம் தங்களைப் பதீதம் என உணர்கின்றனர். நிச்சயமாக ஒரே ஒரு பாரதத்தில் தான் தேவதைகளின் பாவன இராஜ்யம் இருந்தது. பாரதத்தில் தூய்மை இருந்தது. பெரிய செல்வந்தர்கள் இருந்தனர். மிகவும் சுகத்தில் இருந்தனர். இப்போதோ துக்கத்தில் உள்ளனர். சிவபாபா தான் பிரம்மாவின் உடலில் வந்து சொல்லிப் புரிய வைக்கிறார். ஆக, பிரம்மாவையும் நினைவு செய்ய வேண்டும் இல்லையா? நிறையக் குழந்தைகள் இப்படியும் இருக்கிறார்கள், அதாவது நாமோ சிவபாபாவை நினைவு செய்து கொண்டு தானே இருக்கிறோம். சாகார் பிரம்மாவுடன் எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால் எப்போது சிவபாபா இங்கே இருக்கிறார் என்றால் அப்போது பாபாவுக்கு கடிதம் எழுத வேண்டும். தகவல் தெரியப்படுத்த வேண்டும். சிவபாபாவுக்கு-பிரம்மா மூலம். வினாசகாலத்தில் விபரீத புத்தி என்று பாடப் பட்டுள்ளது. மேலும் வினாசகாலத்தில் அன்பான புத்தி - யாரோடு? சிவபாபாவோடு, பிரம்மா மூலம். இப்படியும் மந்தபுத்தி யுள்ளவர்கள் இருக்கிறார்கள்: நாங்களோ சிவபாபாவை மட்டுமே நினைவு செய்கிறோம் எனச்

சொல்பவர்கள். சிவபாபா சொல்கிறார் இல்லையா, என்னை நினைவு செய்வதன் மூலம் உங்கள் துன்பங்கள் நீங்கிவிடும். ஆனால் அவர் எங்கே இருக்கிறார்? நிச்சயமாக இங்கே இந்த பிரம்மாவின் உடலில் தானே இருக்கிறார். இவர் மூலம் கற்பிக் கின்றார். நிராகாருக்கு நீங்கள் எப்படிக் கடிதம் எழுதுவீர்கள்? நாயகன் நாயகிகளுக்கு, நாயகிகள் நாயகனுக்கு கடிதம் எழுதுகின்றனர் இல்லையா? சத்யுகத்தில் தொடங்கி கலியுக இறுதி வரை மனிதர்கள் மனிதர்களுக்குக் கடிதம் எழுதி வந்துள்ளனர். இப்போது ஆத்மாக்கள் பரமாத்மாவைச் சந்திக்கின்றனர். அவருக்குக் கடிதம் எழுதுகின்றனர். நிராகார் பரமபிதா பரமாத்மாவுடன் பேசுகின்றனர். அப்போது பிரம்மாவின் மூலம் அவருடன் தொடர்பு கொள்ள வேண்டும். பிரம்மா மூலம் கடிதம் எழுதினால் தான் இவர்கள் நிச்சயமாக நினைவு செய் கின்றனர் என்று சிவபாபா புரிந்து கொள்ள முடியும். சிலருடைய புத்தியை மாயா முற்றிலும் பற்றிக் கொள்கின்றது, அல்லது தேக அபிமானத்தில் வந்து விட்டால் பிறகு கடிதம் கூட எழுதுவதில்லை. மறந்து விடுகின்றனர். இப்போது வினாச காலத்தில் விபரீதபுத்தி. ஆனால் பாண்டவர்களுடையதோ அன்பான புத்தி. அவர்கள் பிறகு கீதையின் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் என நினைக்கின்றனர். நல்லது, அவரை ஸ்ரீகிருஷ்ணராகவே புரிந்து கொண்டாலும் கூட கடிதம் எழுத வேண்டும். சிவபாபாவுக்கும் எழுத வேண்டும். ஸ்ரீமத் கண்டிப்பாகப் பெற்று பின்பற்ற வேண்டும். சிவபாபாவை நினைவு செய்கிறோம் என்கிறார்கள். ஆனால் சாகார் பிரம்மா இல்லாமல் அறிவுரை கிடைக்க முடியாது. நல்ல-நல்ல முதல்தரமான குழந்தைகளும் எழுது கின்றனர், என்னுடைய யோகம் சிவபாபாவோடு மட்டுமே. நான் அவருக்கு உதவி செய்து கொண்டே இருப்பேன். ஆனால் பிரம்மா பாபா மூலமாக அல்லாமல் தாத்தாவின் ஆஸ்தியைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஒவ்வொரு அடியிலும் அறிவுரை பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படியெல்லாம் பாபாவிடம் செய்திகள் வருகின்றன. பிரம்மாவிடமோ, பிராமணியிடமோ கோபித்துக் கொள்கின்றனர். பிறகு மாயா முற்றிலும் முகத்தைத் திருப்பி விடுகின்றது.. ஒவ்வொரு அடியிலும் நாம் சிவபாபாவிடமிருந்து ஸ்ரீமத் பெற வேண்டும் என புரிந்து கொள்ள வேண்டும். பாபா, இந்த நிலைமையில் நான் என்ன செய்ய வேண்டும்?

பாபா எப்போதும் கேட்டுக் கொண்டே இருக்கிறார்--குழந்தைகளே! குஷியாக, திருப்தியாக இருக்கிறீர்களா? ஒன்று சரீரத்தின் நோய். மற்றது ஆன்மீக நோய். பாபா, நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம், மாயா எங்களோடு போராடுவதில்லை என்று ஒருபோதும் கடிதம் எழுதுவ தில்லை. நல்லது, அவர் அனைத்தையுமே அறிவார். இருந்தபோதும் - இந்த விஷயத்திலும் நான் சரியா? இல்லையா? என்று அவரிடம் அறிவுரை பெற்றுக் கொள்ள வேண்டும் இல்லையா?. யோகம் முழுமையாக இல்லை என்றால் தலை கீழாக ஆகிவிடுகின்றனர். வினாசகாலத்தில் அன்பான புத்தியுள்ள குழந்தைகளோ பாபாவிடம் வரவேண்டும். பாபா இங்கே அமர்ந்திருக் கிறார் இல்லையா? அநேகருக்கு வினாச காலத்தில் விபரீத புத்தி ஆகிவிடுகின்றது. அப்போது தலைகீழான காரியங்களைச் செய்யத் தலைப்படுகின்றனர், குழம்பிப் போகின்றனர். ஸ்ரீமத் பெற்றுக் கொள்ளாமல் காரியம் நடக்காது. வழிகாட்டியின் கை நிச்சயமாக வேண்டும். நீந்து வதற்கு ஆதாரம் அவசியம் வேண்டும். குழந்தைகளுக்கு பாபா எச்சரிக்கை தந்து கொண்டே இருக்கின்றார். ஏதேனும் விஷயத்தில் சந்தேகம் எழுமானால் குறைந்தது இவரிடமாவது (பிரம்மாவிடம்) தொடர்பு வைக்க வேண்டும். சிவபாபாவின் வழிமுறையோ இவரிடம் தான்

கிடைக்கின்றது இல்லையா? பாபா சொல்லிப் புரியவைத்திருக்கிறார்: அகால மூரத்தின் இந்த ரதம் அல்லது ஆசனம் குறிப்பாகத் தீர்மானிக்கப்பட்ட ஒன்று. பாபா சொல்கிறார், நான் இவரது ரதம் அல்லது ஆசனத்தின் ஆதாரத்தை எடுத்துக் கொண்டுள்ளேன். மற்றப்படி நான் யாருக் குள்ளாவது எப்போதாவது பிரவேசமாகி எனது சேவையைச் செய்ய வைக்கிறேன். பாபா சொல்லியிருக்கிறார், யாராவது வாலுடன் கூடிய அனுமான் மீது பக்தி செலுத்துகிறார்கள் என்றால் நான் அவர்களுக்கு அனுமானின் சாட்சாத்காரத்தைச் செய்விக்கிறேன். அவர்களுடைய பாவனையின் பலனை அளிக்கின்றேன். அனுமானின் சாட்சாத்காரம் செய்வித்தால் அந்த பாவனையே மனதில் தங்கிவிடும். அதன் பின்னாலேயே ஒட்டிக் கொள்வார்கள். பாபா அனுபவமுள்ள இந்த ரதத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார். அவரும் நகை வியாபாரியாக இருந்தவர். இதுவும் கூட அவினாசி ஞானரத்தினங்களின் வியாபாரம். கல்ப-கல்பமாக இந்த ரதத்தில் தான் வருவேன், அப்போது தானே காரியமாற்ற முடியும்? பிரம்மா மூலம் பிராமணர் களைப் படைப்பேன் இல்லையா? எப்படி கிறிஸ்து மூலம் கிறிஸ்துவர்கள் படைக்கப் படுகின்றனர், அதுபோல. ராசி கிடைக்கின்றது இல்லையா? ஆக, நான் பிரம்மாவின் ரதத்தில் வரவேண்டியுள்ளது. இவருடைய ஜென்மங்களின் கதையைத் தான் அமர்ந்து சொல்லிப் புரியவைக்கின்றேன். முதல் ஜென்மமோ கிருஷ்ணருடையது. அவருடைய அநேக ஜென்மங்களின் கடைசி ஜென்மத்தில் தான் வருகின்றேன். இதை மிகச் சரியாகச் சொல் கின்றேன். யாராவது கேட்டால் சொல்லுங்கள், முதலில் பிரம்மா நிச்சயமாக வேண்டும். அப்போது தான் அவர் மூலமாக பிராமணர்களைப் படைக்க முடியும். வியக்த (சாகார்) பிரஜாபிதா பிரம்மா வேண்டும். சூட்சுமவதனத்திலோ பிரஜாபிதா இருக்க மாட்டார். பிரஜாபிதா பிரம்மா இங்கே வேண்டும். நான் வருவதும் பாரதத்தில் தான். பயங்கர இருள் இருக்கும் போது பக்தியின் அரைக்கல்பம் முடிவடைகின்றது.

ஹே! பதீத பாவனா வா, எனப் பாடவும் செய்கின்றனர். பிரளயம் ஏற்பட்டால் பிறகு உலகம் பாவன மாக முடியாது. பிரளயம் என்ற சொல் தவறானது. எப்போது மிகவும் துக்கத்தில், பதீதமாக உள்ளனரோ அப்போது நான் வருகின்றேன். பாவன உலகம் என்பது சத்யுக-திரேதாயுகம் ஆகும். துவாபர-கலியுகம் பதீத் உலகம். இங்கே எவ்வளவு கோடி மனிதர்கள் உள்ளனர்! சத்யுகத்திலோ இவ்வளவு மனிதர்கள் வேண்டிய தில்லை. வயிற்றிலிருந்து பாணம் வெளிப்பட்டதாகவும் அதன் மூலம் தங்களது குலத்தையே நாசம் செய்ததாகவும் காட்டு கின்றனர். இதெல்லாம் இட்டுக்கட்டப்பட்ட கதைகள். வயிற்றிலிருந்து எந்தப் பொருளும் வெளிப்படவில்லை. இதுவோ புத்தியின் வேலை. பாருங்கள், அறிவியலால் கூட இப்போது எவ்வளவு சுகங்கள் உருவாகி விட்டன! முன்பு இந்த எரிவாயு, மின்சாரம் எதுவுமே கிடையாது. (பிரம்மா) பாபாவோ இதில் அனுபவஸ்தர். சொல்லவும் செய்கிறார், நான் வயதான ஒருவரின் சரீரத்தில் வருகின்றேன். கிருஷ்ணர் பதீதம் அல்ல. பதீதபாவனா வா எனச் சொல்கிறார்கள் என்றால் பதீத உலகில் பதீத சரீரத்தில் தான் வரவேண்டியுள்ளது. பதீத உலகில் பாவன சரீரம் இருப்பதில்லை. இங்கே ஆத்மாக்களும் தமோபிரதான் என்றால் சரீரங்களும் கூடத் தமோபிர தானமாகவே உள்ளன. பொற்காலம், வெள்ளிக் காலம் எனச் சொல்லப்படுகின்றது இல்லையா? முதலில் பொற்காலம். அங்கே ஆத்மா, சரீரம் இரண்டுமே பாவனமாக உள்ளன. பிறகு ஆத்மா பதீத ஆகிவிடுகின்றது.

அவர்களை வந்து விகாரமற்றவர்களாக-பாவனமாக ஆக்குகின்றேன். மாயா, நல்ல-நல்ல முதல் தரமான குழந்தைகளையும் கூட, காதைப் பிடித்து விடுகின்றது. பிராமணியிடம் அல்லது பிரம்மாவிடம் கோபித்துக் கொண்டாலோ, சந்தேகம் ஏற்பட்டாலோ அவ்வளவு தான்! மாயா முகத்தைத் திருப்பி விட்டு விடும். அன்பான புத்தியிலிருந்து விபரீத புத்தியுள்ளவர்களாக ஆகிவிடுகின்றனர். பிறகு சிவபாபாவிடம் படிப்பதை விட்டு விடுகின்றனர். சிலர் படிக்கின்றனர், ஆனால் முழுமையான தாரணை இல்லை. அப்போது பாபா சொல்கிறார், பரவாயில்லை. இரண்டு விஷயங்களில் மட்டும் உறுதியாக இருங்கள். பாபாவை நினைவு செய்ய வேண்டும். இப்போது உங்கள் புத்தி இங்கும் அங்கும் (வீட்டில்) இருக்க வேண்டும். ஜின்னின் உதாரணம் உள்ளது இல்லையா? ஜின் என்ற அந்த பூதம் சதா வேலை கொடு, இல்லையேல் விழுங்கி விடுவேன் என்று சொன்னது. பாபாவும் சொல்கிறார், நான் நினைவு செய்கின்ற வேலை கொடுக்கிறேன். நினைவு செய்யவில்லை என்றால் மாயா பச்சையாகவே சாப்பிட்டு விடும். நினைவுக்காகக் கொஞ்ச நேரம் ஒதுக்க வேண்டும் இல்லையா? முதலில் சிறிது நேரம், பிறகு பயிற்சி ஆகிக் கொண்டே போகும். பாபா சொல்கிறார், அமைதியாக இருங்கள், நினைவு செய்து கொண்டு மட்டும் இருங்கள். நீங்கள் அறிவீர்கள், பாபா மேலேயும் இருக்கிறார், இங்கேயும் இருக்கிறார். நாம் பாபாவின் அருகில் செல்ல வேண்டும். பாபா இந்த சரீரத்தில் வந்துள்ளார் என்பதை இப்போது நீங்கள் புரிந்து கொண்டீர்கள். நினைவு செய்யவில்லை என்றால் மாயா அப்படியே விழுங்கி விடும். கதைகளோ அதிகமாகவே உருவாக்கியிருக்கிறார்கள்.

இதற்கு முன்பு புத்தியற்றவர்களாக இருந்தீர்கள். இப்போது பாபா சொல்லிப் புரியவைக்கிறார், நான் போய்விடு கின்றேன், பிறகு நீங்கள் உலகத்திற்கு எஜமான் ஆகின்றீர்கள். ஆத்மாக்களாகிய உங்களோடு பேசுகின்றார். ஆத்மா தான் பரீட்சையில் தேர்ச்சி பெறுகின்றது-சரீரத்தின் மூலமாக. இப்போது பாபா சொல்கின்றார், ஆத்ம அபிமானி ஆகுங்கள். இல்லற விவகாரங்களில் இருந்து கொண்டே தன்னை அசரீரி ஆத்மா என உணருங்கள். எவ்வளவு பாபாவை நினைவு செய்கிறீர்களோ அவ்வளவு லாபம் உள்ளது. இதன் பெயர் யோகம் என வைக்கப்பட்டுள்ளது. இல்லை என்றால் இது நினைவு, ஆத்மாக்களுக்குத் தந்தையிடமுள்ள அன்பு. நினைவு செய் கின்றனர். நாயகி-நாயகனுக்கிடையிலும் ஒருவர் மற்றவரின் சரீரத்தின் மீது அன்பு இருக்கிறது. நாயகி-நாயகன் இருவருமே தேகதாரிகள். நாயகிக்கு முன்பு நாயகன் இருப்பதாக உணர்கின்றனர். பிறகு நாயகனுக்கு நாயகி காணப்படுவதாகத் தோன்றும். இப்போது நீங்கள் பரமபிதா பரமாத்மாவின் நாயகிகள். நாயகன் ஒருவர், மற்ற ஆத்மாக்கள் அனைவரும் நாயகிகள். அந்த நிராகார் தந்தை இந்த சாகார் மூலம் உங்களுக்கு வழிமுறை தரு கின்றார். நீங்களோ ஆத்மாவையோ, பரமாத்மாவையோ பார்க்க இயலாது. எப்போதாவது யாருக்காவது ஆத்மாவின் சாட்சாத்காரம் ஆகின்றது. மனிதர்களோ எதையும் புரிந்து கொள்ள இயலாது. பாபா ஒளியின் சாட்சாத்காரம் செய்விக்கிறார். ஏனென்றால், பாவனை இருந்து விடுகின்றது. சொல்கிறார்கள் இல்லையா, மிகவும் ஒளி தேஜோமயமாக உள்ளது, நிறுத்துங்கள், என்னால் கண் கொண்டு காண முடியவில்லை சிவப்பு நிறக் கண்களாக ஆகிவிடுகின்றன. பாபா சொல்லிப் புரியவைக்கின்றார், நானோ நட்சத்திரமாக உள்ளேன். மின்மினிப்பூச்சி இருக்கிறதே அதுபோல. எப்படி அதனுடைய ஒளி

ஜொலிக்கின்றதோ அதே மாதிரி, நட்சத்திரத்தைப் போல ஆத்மா வெளிப்படுகின்றது. (விவேகானந்தரின் உதாரணம்). ஆக, யாருக்கு எத்தகைய பாவனை உள்ளதோ அதுபோலவே சாட்சாத்காரம் ஆகும். பாபா வந்து சொல்லிப் புரியவைக்கிறார், இந்த உங்களது பாவனை இருந்து வந்துள்ளது. ஆகவே நான் அதே ரூபத்தில் சாட்சாத்காரம் செய்விக்கிறேன். எப்படி ஆத்மா உள்ளதோ அதே போல் தான் பரமாத்மாவும். ஆனால் அவர் ஞானக்கடல். ஆத்மாவும் சைதன்யமானது. சம்ஸ்காரங்கள் அனைத்தும் ஆத்மாவில் உள்ளன. பாபாவிடமும் சம்ஸ்காரங்கள் உள்ளன: ஸ்தாபனை, வினாசம், பாலனையின் காரியத்தைச் செய்வதற்கான சம்ஸ்காரங்கள். திரிமூர்த்தி இல்லையா? சிவபாபாவையும் யாருமே அறிந்து கொள்ளவில்லை. ஆக, திரிமூர்த்திக்கு மேலே படைப்பவராகிய சிவனை மறந்து விட்டிருக் கிறார்கள். உண்மையில் கீதையின் பகவான் திரிமூர்த்தி சிவன் ஆவார். ஆனால் அவர்கள் பிறகு திரிமூர்த்தி பிரம்மா எனச் சொல்லி விடுகின்றனர். அட, பிரம்மா-விஷ்ணு-சங்கரையும் கூடப் படைப்பவர் ஒருவர் இருப்பார் இல்லையா? பிரம்மாவின் பெயர் வேறு, சிவனுடைய பெயர் வேறு. இல்லையென்றால் அவர் படைப்பவர் என்று யாரைச் சொல்கிறீர்கள்? யாருமே இதைப் புரிந்து கொள்ளவில்லை. பாபா வந்து குழந்தைகளுக்குச் சொல்லிப் புரியவைக்கின்றார். உங்களுடையது அன்பான புத்தி. சிலருக்கு விபரீதபுத்தி ஆகிவிடுகிறது. அவர்கள் கௌரவர் களைப் போல் ஆகிவிடுகின்றனர். இங்கே வருகிறார்கள், ஆனால் பதவி குறைந்து விடுகின்றது. சேமிப்பான அனைத்தும் ஒன்றுமில்லை என்றாகி விடுகின்றது. பிறகு பிரஜையில் போய்க் குறைந்த பதவி அடைவார்கள். இச்சமயம் பாருங்கள்--படிப்பின் மூலம் என்னென்னவாக ஆகிவிட முடிகின்றது! பாபா சொல்கிறார்--குழந்தைகளே! தேவதை ஆகவேண்டுமானால் இந்த தீய பொருளை (விகாரம் என்ற விஷத்தை) விட்டுவிட வேண்டும். ஒரு பாபா மட்டுமே உண்மையான சத்குரு ஆவார். அவர் தாம் முக்தி-ஜீவன் முக்திக்கு அழைத்துச் செல்லக் கூடியவர். அனைவரும் ஒரே சமயத்தில் செல்லத் தான் வேண்டும். யாராவது இடையில் சென்று விடுவார்கள் என்பதில்லை. ஒவ்வொருவரும் அவரவர் பாகத்தை முழுமையாக நடித்தாக வேண்டும். நிச்சயமாக இறுதியில் கொசுக்கூட்டத்தைப் போலத் திரும்பிச் செல்ல வேண்டும். கீதையிலும் எழுதப்பட்டுள்ளது, ஆனால் கிருஷ்ண பகவான் வாக்கு என்று எழுதியதன் மூலம் கீதையின் மகத்துவமே போய்விடுகின்றது. தந்தை வராமற்போனால் முக்தி தாமத்திற்கு எப்படிச் செல்வது? பிறகு தங்கள் சமயத்தில் வந்து தங்களது பாகத்தை நடிக்கின்றனர். இது விஸ்தாரமாகப் புரியவைத்தலாகும். சுருக்கமாகச் சொல்கிறார், என்னை நினைவு செய்யுங்கள். கடவுள் ஒருவர் தாம். மற்ற அனைவரும் குழந்தைகள். இப்போது நீங்கள் திரிகாலதரிசி ஆகியிருக்கிறீர்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்து, காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய், தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. சதா குஷியாக, திருப்தியாக இருப்பதற்கு ஒவ்வொரு அடியிலும் பாபாவின் அறிவுரை பெற்றுக்கொள்ள வேண்டும். சிவபாபாவை பிரம்மாவின் மூலம் நினைவு செய்ய வேண்டும். தன்னைப்பற்றிய செய்திகளை பாபாவுக்குத் தெரியப்

படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

2. ஒருபோதும் எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும் சந்தேகம் கொள்ளலாகாது. பிராமணி யிடம் அல்லது பிரம்மா பாபாவிடம் கோபித்துக் கொண்டு படிப்பை விட்டு விடக் கூடாது. சதா அன்பான புத்திஉள்ளவர்களாக இருக்க வேண்டும்.

வரதானம் : சுக சொரூபம் ஆகி முழு உலகத்திற்கும் சுகத்தின் கிரணங்களைப் பரப்பக்கூடிய மாஸ்டர் ஞான சூரியன் ஆகுக.

எவ்வாறு தந்தை ஞானத்தின் கடலாக, சுகத்தின் கடலாக இருக்கின்றாரோ, அதுபோன்று சுயம் தானும் ஞான சொரூபமாக, சுக சொரூபமாக ஆகுங்கள். ஒவ்வொரு குணத்தின் வர்ணனை மட்டுமல்ல, ஆனால், அனுபவம் ஏற்பட வேண்டும். எப்பொழுது சுக சொரூபத்தின் அனுபவி ஆகுவீர்களோ, அப்பொழுது சுக சொரூப ஆத்மாவாகிய உங்கள் மூலம் சுகத்தின் கிரணங்கள் விஷ்வத்தில் பரவும். எவ்வாறு சூரியனின் கிரணங்கள் முழு விஷ்வத்திற்கு செல்கிறதோ, அவ்வாறே உங்களுடைய ஞானம், சுகம், ஆனந்தத்தின் கிரணங்கள் எப்பொழுது அனைத்து ஆத்மாக்கள் வரை சென்றடையுமோ, அப்பொழுதே மாஸ்டர் ஞான சூரியன் என்று சொல்வார்கள்.

சுலோகன்: யார் தன்னுடைய பேச்சு, எண்ணம் மற்றும் கர்மத்தின் மூலம் தெய்வீகத்தன்மையின் அனுபவத்தை செய்விக்கின்றார்களோ, அவர்களே தெய்வீக பிறப்பெடுத்த பிராமணர்கள் ஆவார்கள்.